28.10.2025.

சி.சி.121/2022

**அ.சா.3. வசந்தி, க/பெ. தட்சணாமூர்த்தி மனுவின்பேரில் குறுக்கு விசாரணை.**

அ.சா.1 எனது மகள் ஆவார். அ.சா.2 எனது கணவர். அ.சா.4 எனது மகன் ஆவார். இவ்வழக்கில் புகார் கொடுக்கப்பட்டு 2 மாதங்கள் கழித்துதான் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். அப்போது 1-ம் எதிரியை கைது செய்து காவல் நிலையத்தில் இருந்தார். புகார் கொடுத்த பிறகு போலிசார் விசாரிக்கவில்லை. நாங்கள் சாலை மறியல் செய்ததால்தான் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கச்சொல்லி எதிரிகள்தான் சொன்னார்கள் அதனால்தான் புகார் கொடுத்தோம். திருமணத்திற்கு பிறகு எனது மகள் சென்னையில்தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான் சென்னையில் ஏதும் புகார் கொடுத்தோம் என்றால் இல்லை. 1-ம் எதிரி வீட்டில் பொருட்களை எடுக்கசெல்லும்போது நானும் உடன் சென்றேன் என்றால் சரிதான். பாதி சாமான்கள்தான் கொடுத்தார்கள். போலிசார் விசாரணையில் எதிரிகள் பாதி சாமான்கள் கொடுக்கவில்லை என்பதை கூறினோமா என்றால் போலிசார் கேட்கவில்லை அதனால் நாங்கள் சொல்லவில்லை. திருமணம் ஆனதிலிருந்து எனது மகளுக்கு ஏற்பட்ட கொடுமைகளுக்கு புகார் ஏதும் கொடுத்தோமா என்றால் இல்லை. எங்களுக்கு போதுமான வசதியில்லை. எனது மகளுக்கு சீர்வரிசையாக செய்யப்பட்ட நகைகளின் பட்டியலை போலிசாரிடம் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. திருமண சமயத்தில் சீர்வரிசை பொருட்களை போட்டோ ஏதும் எடுத்தோமா என்றால் எடுக்கவில்லை.

1-ம் எதிரி 3-வது திருமணம் செய்து கொண்டதற்கான விவரத்தை போலிசாரிடம் கூறினோமா என்றால் கூறியுள்ளோம். 3-வது திருமணம் செய்து கொண்ட பெண்ணின் பெயர் ராஜேஸ்வரி ஆகும். எந்த ஆண்டு 3-வது திருமணம் நடந்தது என்று வருடம் தெரியாது. 3-வது திருமணம் 1-ம் எதிரிக்கு நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை வீட்டில் சென்று பார்த்தோம். அது சம்மந்தமாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளோமா என்றால் கூறவில்லை. போலிசாரும் 3-வது திருமணம் தொடர்பாக எங்களை விசாரிக்கவில்லை. எனது மகளுக்கு 2-வது திருமணம் ஆகும். எனது பேத்திக்கு பிறந்த முடி எடுத்தபோது நாங்கள் அனைவரும் ஒன்றாகதான் இருந்தோம். திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் 1-ம் எதிரியின் வீட்டில் இருந்துகொண்டு அவர்களை ஆட்டிபடைத்தோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு வரதட்சணை கொடுக்க போதுமான வசதியில்லை என்றாலும் நாங்கள் சொல்வதுபோல் எந்தவித வரதட்சணையும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி குற்றவாளி இல்லையெனறாலும் சரியல்ல.